**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS (Recorded through V.C)**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 217/2023 P.W. 10 /L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. அருள் பிரகாஷ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 25.02.2026.**

**இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி தற்சமயம் பணிமாறுதலில் திருநெல்வேலி மாநகர பேட்டை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிசெய்து வரும் நிலையில் வழக்கு விசாரணையை துரிதப்படுத்தும் பொருட்டு வழக்கின் தன்மை மேற்படி சாட்சியின் பணியின் தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மேற்படி சாட்சிய விசாரணையானது இணைய தள காணொலி காட்சி வாயிலாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய Microsoft Teams செயலி மூலம் பதிவுச் செய்யப்படுகிறது. மேற்படி சாட்சியானவர் திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் காணொலி காட்சி அறையிலிருந்து சாட்சியம் அளிக்கிறார். மேற்படி விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரும், அரசு தரப்பு வழக்கறிஞரும் முன்னிலையாகியுள்ளார்கள்.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது திருநெல்வேலி மாநகர பேட்டை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு குளச்சல் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிச்செய்த போது குளச்சல் காவல்நிலையத்தில் பதிவுச் செய்து வைத்திருந்த குளச்சல் காவல்நிலைய குற்ற எண் 138/2022 சட்டப்பிரிவு 364, 294(பி), 354 - B, 506 பத்தி இரண்டு இ.த.ச 1860 வழக்கு கோப்பினை ஆவணங்களின் அடிப்படையில் பார்வையிட்டு 26.06.2022 அன்று குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

நான் ஏற்கனவே பதிவுச் செய்து விசாரணைச் செய்து வைத்திருந்த வழக்கு கோப்பினை வைத்து தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது முறையாக மேல்விசாரணை செய்யாமல் சாட்சிகளை விசாரிக்காமல் ஆவணங்களின் அடிப்படையில் அதனை முறையாக பரிசீலிக்காமல் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது உண்மைக்கு மாறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஏற்கப்பட்டுஎன் முன்னிலையில் இணைய தள காணொலி காட்சி வாயிலாக திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற காணொலி காட்சி அறையில் வைத்து இசக்கி முத்து (Junior Assistant) முன்னிலையில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.